<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>

<u>O.S. 133/2019</u>

<u>Date</u> : 05.02.2026

<u>பி. வா.சா.</u> 2 - யாக்கோபு

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

எனது சொந்த ஊர் எது என்றால் கரம்பவிளை. செந்தூரன் மகனான நான் கரம்பவிளையில் வசிப்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். யார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால் 8ம் பிரதிவாதி ஆத்தியப்பன். இவ்வழக்கு எத்தனை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என் றால் கோவில் யாருடையது என்பதற்காக. நான் எந்த மதத்தை சேர்ந்தவன் என்றால் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவன். எங்கள் ஊரில் என்ன கோவில் உள்ளது நான் எங்கு செல்வேன் என்றால் சல்வேஷன் ஆர்மி கோவிலுக்கு செல்வேன். 8ம் பிரதிவாதி ஆத்தியப்பன் சொல்லும் கோவிலில் நான் உறுப்பினர் அல்ல என்றால் சரிதான். நான் மேற்படி கோவிலுக்கு செல்வது இல்லை என்றால் ரோட்டுபாதையில் இருப்பதால் பார்த்துள்ளேன் அந்த வழியாக தான் செல்வேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் யார் சொல்லி கொடுத்தார்கள் என்றால் நான் தான் கூறினேன். படிக்க தெரியுமா என்றால் தெரியாது.

முதல் விசாரணையில் என்ன விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது குறித்து தெரியுமா என்றால் அவர்கள் கேட்டதற்கு நான் பதில் சொன்னேன். கையெழுத்து எந்த மொழியில் போட்டேன் என்றால் சரியாக எழுத தெரியாது எனது பெயரை யாக்கோபு என்று எழுதினேன். இனிஷியல் போடமாட்டேனா என்றால் போடமாட்டேன். நான் எனது

சகோதரனின் மனைவியான எனது இரண்டாவது மனைவியுடன் தான் இருக்கிறேன். முதல் மனைவியை நான் அடித்துக்கொன்றதாக என் மீது குற்ற வழக்கு இருக்கிறது என்றால் சரியல்ல தவறு அவர் உயிருடன் தான் இருக்கிறார். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. யார் பெயரில் வழக்கு பட்டிகை சொத்திற்கு கரத்தீர்வை செலுத்தப்படுகிறது என்றால் தெரியாது. எந்த நாட்களில் கோவிலில் விளக்கு ஏற்றுவார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தேதி தெரியாது. பிரதிவாதி ஆத்தியப்பன் கோவில் கட்டியதை இடித்து விட்டார்கள் என்றால் சரிதான். இடித்த போது நான் அங்கு இருந்தேனா என்றால் பார்த்துவிட்டு சென்றேன். யார் இடித்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

வழக்கின் 1ம் சாட்சிக்கு தெரிந்தவர்கள் காவல்துறையிலும், பத்திரிகை துறையில் நிபுணராகவும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் யார் என்றால் தெரியாது. வழக்கின் 1ம் சாட்சி ராஜதுரை மற்றும் 8ம் பிரதிவாதி ஆத்தியப்பனையும் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி இருவருக்கும் நான் உறவினர் என்றால் இல்லை. பொற்றையடி ஒத்தப்பனை இசக்கியம்மன் கோவில் யாருடைய சொத்தில் இருக்கிறது என்றால் புறம்போக்கு நிலத்தில் உள்ளது. கோவிலில் திருவிழா எந்த மாதம் எந்த தேதியில் நடக்கும் என்றால் ஆண்டுக்கு ஒருமுறை நடத்துவார்கள் சரியாக தெரியாது. மேற்படி திருவிழாவிற்கு நான் போவதில்லை என்றால் மிகுந்த நேரம் இருப்பதில்லை. ராதுரை என்ன வேலை செய்து வருகிறார் என்றால பலூன் வியாபாரம். வழக்கின் 1ம் சாட்சி ராஜதுரை பணபலம் மிக்கவர் என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

வா.சா.ஆ.25 புகைப்படத்தின் நடுவே இருக்கும் நபர் 8ம் பிரதிவாதி ஆத்தியப்பன் என்றால் சரிதான். தற்போது நான் வேலை செய்து வருகிறேனா என்றால் வேலை செய்ய

இயலவில்லை. 8 ம் பிரதிவாதி ஆத்தியப்பன் இன்று நான் சாட்சியம் அளிப்பதற்கு ஏதேனும் சொல்லிக்கொடுத்தாரா என்றால் அந்த நிலமையில் நான் வரவில்லை. வழக்கை குறித்தோ, கோவிலை பற்றியோ எனக்கு எவ்வித விப ரமும் தெரியாது என்றால் நான் போக்குவரத்து நேரங்களில் மட்டும் பார்ப்பதால் எனக்கு எதுவும் தெரியாது. நான் 8 ம் பிரதிவாதி ஆத்தியப்பன் அழைத்ததன் பேரில் அவர் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் ஆகையால் நான் அளிக்கும் சாட்சியம் செல்லாது என்றால் சரியல்ல. எனது சாட்சி பொய்யான சாட்சியம் என்பதால் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.